PERMANENT REFERENCE

# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE KARATHEEVU SECRETARIAT DIVISION.

LIBRARY
19 NOV 1997
Eastern University, Sri Lanka.

MR. NADARAJAH - KONESWARANATHAN

001.40392 KON
171
Library - EUSL
27038

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY,
SRI LANKA

1997

PROCESSED
Main Library, EUSL

## பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 01. | நன்றியுரை | | |
| 02. | நூலின் சுருக்கம் | | 1 — 2. |
| 03. | அத்தியாயம்<br>அறிமுகம் | 01 | 3 — 6 |
| 04. | அத்தியாயம்<br>முன் ஆய்வு | 02 | 7 — 23 |
| 05. | அத்தியாயம்<br>காரைதீவு பிரதேச செயலகம் பற்றிய அறிமுகம். | 03 | 24 — 37 |
| 06. | அத்தியாயம்<br>விவசாயமும்விலங்குவேளாண்மையும் | 04 | 38 — 56 |
| 07. | அத்தியாயம்<br>மீன்பிடி | 05 | 57 — 68 |
| 08. | [redacted] | ~~06~~ | |
| 09. | அத்தியாயம்<br>கைத்தொழில் | 06 | 69 — 79. |
| 10. | அத்தியாயம்<br>கல்வி | 07 | 80 — 95 |
| 11. | அத்தியாயம்<br>சுகாதாரமும், மருத்துவசதியும் | 08 | 96 — 113 |
| 12. | அத்தியாயம்<br>வீடமைப்பு | 09 | 114 — 121 |
| 13. | அத்தியாயம்<br>கூட்டுறவு | 10 | 122 — 130 |
| 14. | அத்தியாயம்<br>புனர்வாழ்வு | 11 | 131 — 139 |
| 15. | அத்தியாயம்<br>புனர்நிர்மாணம் | 12 | 140 — 145 |
| 16. | அத்தியாயம்<br>செயற்பாட்டுத்திட்டம் | 13 | 146 — 181 |
| 17. | அடிக்குறிப்பு | | 182 |
| 18. | உசாத்துணை நூல்கள் | | 183. |

# ஆய்வறிக்கை சுருக்கம்

எமது ஆய்வானது காரைநகர் பிரதேச பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டமாக அமைகின்றது. — இதன் அடிப்படையில் விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், சுயதொழில் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, கட்டுமான புனர்வாழ்வு புனர்நிர்மாணம் — போன்ற துறைகள் மக்களுக்கு வழங்கும் பங்களிப்பு என்ன, எவ்வாறான — மாற்றங்களை இவை கொண்டு வருகின்றன என்பது பற்றி ஆராயப்படுகின்றது.

விவசாயச் செய்கையில் கூடுதல் நிலம், ஊழியவளம் என்பன கிடைப்பெறுவது அரசு, அரசுசார்பற்ற நிறுவனங்களின் சிறு உதவிகளும் கிடைக்கின்றது. முதலைப் பற்றாக்குறை, மரபுரீதியான தொழில் நுட்பம், குறைந்தளவு உற்பத்தி குறைந்தளவு சந்தை வாய்ப்பு என்பன விவசாய செய்கை அபிவிருத்திக்குத் தடையாக உள்ளது.

மீன்பிடிக்கென கடல், போன்ற நீர்வளம் காணப்படுகின்றது. மீனவர்களுக்கு உதவிகளை வழங்க நிறுவனங்கள் இயங்குகின்றன. அதிக மீனவர்கள் உள்ளனர் இங்கு. ஆனாலும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மீன்பிடிப்பில் ஈடுபடாமை, ஆழ்கடல் மீன்பிடியின் வளர்ச்சியின்மை, மூலதனப்பற்றாக்குறை, அரசின் போதிய உதவியின்மை என்பன மீனவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன.

சிறுகைத்தொழில், சுயதொழில் முயற்சிக்கான மூலவளங்களும், ஆர்வமும் காணப்படுகின்றது. அரசின் ஊக்குவிப்பின்மை, சிறுஅளவிலான உற்பத்தி முறை நவீன நுட்பம் பயன்படுத்தாமை, பொருட்களின் விலைமைப்பில் வீழ்ச்சி மூலதனக் குறைபாடு என்பன இத்துறையின் வளர்ச்சிக்குத் தடையாகஉள்ளது.

கல்வி வாய்ப்புக்கென பாடசாலைகள் ஆசிரியர்கள் இருந்தாலும் — பாடசாலைகளுக்கு ஒழுங்கான வசதிகள் வழங்கப்படுவதில்லை. பொருத்தமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றாக்குறை, மாணவர்கள் பெற்றோர்களின் அக்கறையின்மை போன்றவற்றினால் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

சுகாதார சேவைகளை வழங்க வைத்தியசாலை இருந்தாலும், வைத்தியர், மருந்து வகைகள் வைத்திய சேவையை வழங்குவதற்கு தேவையான வசதிகள் இல்லை போன்ற காரணங்களினால் தகுந்த சேவையை மக்கள் பெற முடியவில்லை. மக்களின் வறுமையும் சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு தடையாக காணப்படுகின்றது.

வீடற்றோர் தொகை அதிகளவு நம்மாவட்டமும். இருக்கும் வீடுகள் அதிகமானவை பொருத்தமற்றவையாகவும், சேதமடைந்த உள்ளவையாகவும் - காணப்படுகின்றன. வீட அமைப்பதற்கு பெரும் தொகைப் பணம் தேவைப்படுவதால் நம் பகுதி மக்களால் இத்தேவை பூர்த்தி செய்ய முடியவில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் சேவைகளை மக்களுக்கு வழங்கினாலும் அது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. அதிகமானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் துறைகளில் இவை முடங்கியிருப்பதால் இது அபிவிருத்தியைப் பாதிக்கின்றது.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் மூலம் பாதிக்கப்பட்ட உயிர்களுக்கும், உடமைகளுக்கும் சொத்துக்களுக்கும் சில உதவிகளை பெறக்கூடியதாக இருக்கின்றது. ஆனாலும் இவை காலம் கடந்தே கிடைக்கின்றது. புனர்நிர்மாணத்திட்டப் பணிகள் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பிட்ட பல்வேறு துறைகளில் தற்கால நிலையும் அபிவிருத்திப் பிரச்சினைகளும் எதிர்காலத்தில் எவ்வாறான வழிவகைகளை கையாள்வதன் மூலம் குறிப்பிட்ட துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என ஆராயப்பட்டுள்ளது.